இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தைத் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டுவதன் செயற்படுத்தப்படுகின்றன. தவறாக குறிப்பிடப்பட்டதன் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாமல் சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையை பயன்படுத்தலின் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களினஒட்டுமொத்த முன்வைத்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது எனவும்

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் ஒருவர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புட்டுள்ளதாக

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

சட்டங்கள், விதிகள் கட்டளைகளுடனான தொடர்பு		**அவதானிப்புக்கள்**
---		---
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய ‘ PE/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி	நிதியாண்டு முடிவடைந்து 06 மாதங்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை மும்மொழிகளிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை இதுவரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

அதிகாரங்கள், இலக்குகள், பணிகள்				அவதானிப்புக்கள்
---				---
(அ)	2016 மார்ச் 01 திகதிய இலக்கம் 04/2016 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை			
	i	02 மற்றும் 4.5 பந்தி		அனைத்து சுயநிதி ஈட்டல் செயற்பாடு களையும் இலாபம் கிடைக்காத அடிப்படையில் மற்றும் கிரயம் மேவுகை செய்யும் அடிப்படையில் நடாத்திச் செல்ல வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், 2018 சனவரி 01 திகதி முதல் 2022 ஜூலை 31 திகதி வரை செயற்படுத்தியிருந்த 12 பாடநெறிகளிற்குரிய பாதீட்டு வருமானம் ரூபா 29,245,000 தொடர்பாக அந் நியதிகளுக்கு புறம்பாக பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது.
	ii	4.5 பந்தி		2018 சனவரி 01 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட பாதீட்டு வருமானம் ரூபா 209,370,600 ஆன 55 சுய நிதி ஈட்டும்ல் செயற்பாடுகளிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
	iii	5.2.1 பந்தி		மொத்த நேரில் கிரயத்தின் 15 சதவீதம் முதல் 30 சதவீத அளவு நிறுவகத்தின் அபிவிருத்தி செலவு விடயங்களிற்காக ஒதுக்க வேண்டிய போதும், 2018 சனவரி 01 ஆந் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆந் திகதி வரையான காலத்தினுள் செயற்படுத்திய 21 சுய நிதி ஈட்டும் செயற்பாடுகளிற்குரிய பாதீட்டு வருமானம் ரூபா 58,840,600 இலிருந்து நிறுவகத்தின் அபிவிருத்தி செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் வளங்கள், சிக்கனமாகவும் செயற்திறனாகவும் காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

03 ஏனைய விடயங்கள்

(அ) 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை காலத்திற்குரிதாக 1891 மாணவர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 30,259,400 ஆன நிலுவை பாடநெறி கட்டணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி கால எல்லை முடிவடைந்த ரூபா 12,580,485 ஆன 06 ஆராய்ச்சி மானியங்களிற்குரிய ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய அல்லது அதன் காலத்தை நீடிக்க மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்காத காரணத்தால் குறித்த ஆராய்ச்சிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன.

(இ) வேலைகள் நிறைவு செய்யப்பட்ட 06 ஆராய்ச்சி மானியங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,087,783 ஆன நிலையான சொத்துக்களை மீளாய்வாண்டு இறுதி வரையும் நிறுவகத்திற்கு கையேற்பதற்கு அல்லது குறித்த கருத்திட்டத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான காலத்தினுள் செயற்படுத்தி இருந்த ரூபா 75,457,930 ஆன 19 ஆராய்ச்சி மானியங்களிற்கு உரியதாக ஆராய்ச்சி பத்திரங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 06 ஆராய்ச்சி மானியங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 1,430,243 தொகையை செயற்படுத்தாததால் மற்றும் 04 ஆராய்ச்சி நிதியங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 2,038,815 தொகை குறித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளாத காரணத்தால் மீளாய்வாண்டினுள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டன.

(ஊ) செயலமர்வுகள் மற்றும் குறுங்கால பாடநெறிகள் என்பவற்றிகாக செலுத்த வேண்டிய ரூபா 971,812 தொகை மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

அசல் ஆவணத்தில் கையொப்பமிடப்பட்டது

15. தணிக்கை அறிக்கைக்கு பதில்

விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக முகாமைத்துவத்தின் விளக்கங்களுக்கான தெளிவுபடுத்தல்

2.2.2	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை	
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய PE/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி	
	உயர்கல்வி அமைச்சினால் 23.05.2022 ஆந் திகதிய கடிதத்தில் மூலம் தெரிவித்தபடி, விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டின் ஆணடறிக்கையின் இணைப்பை (Google இணைப்பு) 07.06.2022 ஆந் திகதி உயர்கல்வி அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. அதன் பினனர் 15.09.2022 ஆந் திகதி , உயர்கல்வி அமைச்சினால் அறிவித்த பிரகாரம் விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தினால் ஆண்டறிக்கையின் 6 பிரதிகள் மற்றும் 2 PDF குறுந்தகடுகளை 22.11.2022 அன்று உயர்கல்வி அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. உயர்கல்வி அமைச்சின் 2023.03.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக 12 அச்சீட்டுப் பிரதிகள் மற்றும் 2 CD/DVD 2023.03.29 ஆந் திகதி பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.	
2.2.3	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயற்பட்டுள்ளதாக .	
(அ)	2016 மார்ச் 01 ஆந் திகதிய ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை	
	i. 02 மற்றும் 4.5 பந்திகள்	கணக்காய்வு அறிக்கையில் பாதீடப்பட்ட வருமானத்தை விட பாதீட்டு செலவினம் அதிகமானதென குறிப்பிடப்பட்ட பாடநெறிகளுக்கு இடையே ஐந்து பாடநெறிகளில், இருந்து சுற்றறிக்கையில் அபிவிருத்தி செலவின விடயத்திற்கு பெறப்படும் குறைந்தபட்ச பங்களிப்பான 20% ஐ விட அதிகமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றறிக்கையின்படி, குறைந்தபட்ச பங்களிப்பான 20% பங்களிப்பினை பெறுவதற்கு போதுமான மாணவர்கள் பதிவு செய்யப்படாத 03 பாடநெறிகள் குறித்த பாடநெறிகள் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு செய்யப்படும் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு நிதிக் குழு மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன், செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. மேலும், பாதிடப்பட்ட செலவினங்களை விட பாதிடப்பட்ட வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில், இந்த மிகைகளையும் உள்ளடக்கிஇறுதி நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

	ii. 4.5 பந்தி	கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சுயநிதி நடவடிக்கைகளில், ஏற்கனவே முடிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன, மேலும் எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரத்திறக்காக அனுப்பப்படும்.
	iii 5.2.1 பந்தி	விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக எந்தவொரு ததிறைசேரி ஒதுக்கீடு கிடைக்க பெறப்படாததால், நிறுவனத்தின் அனைத்து பொது மேந்தலைச் செலவுகளும் விஞ்ஞான பட்டபின் படிப்புகளுக்குத் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு வரவு செலவுத் திட்ட ஆவணங்களால் ஈடுசெய்யப்பட வேண்டும். எனவே, மொத்த செலவை விட வருவாயில் 5% பங்களிப்பு மொத்த பொது மேந்தலைச் செலவுக்காக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் மொத்தச் செலவினமும் வருமானத்தால் ஈடுசெய்யப்பட வேண்டும் என்பதால், சுற்றறிக்கையின் பத்தி 5.2.2 இன் படி, பணிப்பாளரின் எந்தவொரு செலவினப் விடயத்திற்கும் எதுவும் ஒதுக்கப்படாததுடன் நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் ஒற்றுமை, செலவுகள் மேம்படுத்தலுக்கான செயற்பாடுகளுக்காக தேவைக்கேற்ற வகையில் விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் பொது நிதி ஊடாக உரிய அங்கீகாரத்துடன் செலவினம் மேற்கொள்ளப்படும்.
2.2.4	2022 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டம் நிறுவனத்தின் தேவைகள் மற்றும் அதன் நிதி ஏற்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து பெறுகைகளும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு ஒதுக்கீடு செய்த திறைசேரி ஒதுக்கீடுகளை வழங்காமை. மற்றும் 27.04.2022 ஆந் திகதிய 2022.08.08 திகதிய 04/2022 மற்றும் 07/2022 ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றறிக்கையின் படி புதிய நிரமாணங்கள் பெறுகைகளை இடைநிறுத்துமாறு மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிர்ணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. நிதி ஒதுக்கீடுகள் பெறப்பட்டு மற்றும் மேற்படி சுற்றறிக்கை கட்டளைகளில் திருத்தம் செய்யப்பட்ட பிறகு, அதற்கான புதிய நிர்மாணங்கள் மற்றும் பெறுகைப் பணிகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
2.3	ஏனைய விடயங்கள்	
(அ)	விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் பல்வேறு பட்டப்பின் படிப்புகளை தொடர பதிவு செய்துள்ள மாணவர்களிடையே, உரிய பட்டப் படிப்புகளை முடிப்பதற்கு வழங்கப்பட்ட காலஎல்லையை முடிக்காத மாணவர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பாடக் கட்டணங்களை நிதிக்கூற்றுக்களில் பெறத்தக்க கணக்குகளின் கீழ். காட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் நாடு மூடப்பட்டதால், கல்வி நடவடிக்கைகளை எதிர்பார்த்தபடி நடத்த முடியவில்லை, மேலும் 2022 ஆம் ஆண்டில், நாட்டின் மோசமான பொருளாதார நிலைமை மற்றும் அதன் தாக்கம் காரணமாக கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி, திட்டமிட்டபடி கல்வி நடவடிக்கைகளை நடத்த முடியவில்லை. பாடநெறிக் கட்டணம் வசூலிப்பதிலும் சிக்கல் ஏற்பட்டதாக இருப்பினும், அனைத்து படிப்புகளும் நிகழ்நிலை கற்றல் முறையின் மூலம் தொடங்கப்பட்டதால், மாணவர்கள் தங்கள் படிப்பை மீண்டும் தொடங்கியுள்ளனர், அதன்படி, பாடத்தின் இந்த நிலுவைத் தொகை வசூலிக்கப்படுகிறது. மேலும், அனைத்து மாணவர்களுக்கும் பாடப்பிரிவு கட்டண நிலுவைகளை உடனடியாக செலுத்துமாறு நினைவூட்டல்களை அனுப்ப ஏற்கனவே முயற்சிகள்	

	மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(ஆ)	கணக்காய்வு வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சிப் பணிகளை முடிக்கவோ அல்லது நீடிக்கவோ எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ள 06 ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான காரணங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 6225 - Collaborative Research Activities இந்த ஆராய்ச்சி மானியம் தொடர்பான ஆய்வு ஏற்கனவே முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி மானியக் கணக்கில் ரூபா. 645,815.33 தொகை மூலம் ஆராய்ச்சி உபகரணங்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதில் ரூபா 430,059.65 தொகை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளது. கணக்கில் உள்ள நிலுவைத்தொகை மூலம் உபகரணங்களை வாங்குவதற்கான கட்டளை இடப்பட்டாலும், சம்பந்தப்பட்ட வழங்குனர்கள் பொருட்களை வழங்க மறுப்பதால் மீண்டும் விலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.. ஆராய்ச்சி மானியத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் ஆய்வுப் பணிகள் ஏற்கனவே முடிந்துவிட்டதால், கால நீடிப்பு அவகாசம் வழங்கப்படவில்லை. 6279 - Study on floristic Diversity of Ambokka Mountain Range மீளாய்வாண்டின் இறுதியில், இந்தக் கணக்கில் மீதிக மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி மானியக் கணக்கில் காணப்பட்ட மீதி தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஏற்கனவே பயன்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய ஆராய்ச்சி மானியக் கணக்கில் மீதியொன்று காணப்படவில்லை. 6291 - Proposed Project on Synthesis ofValue Added Product From Sri Lanka Zircon Sand இந்த ஆராய்ச்சி மானியம் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகளை முடிக்க அல்லது தொடர்புப்பட்ட ஆராய்ச்சி மானிய நிறுவனத்தால் காலத்தை நீடிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி பெறுநருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. 6305 - Comparative Analysis of soil carbon sequestration capacity of Different Mangrove and Associated Plant Communities in the Manduganga RAMZAR site and madampa Vila sanctuary மீளாய்வாண்டின் இறுதியில், இந்தக் கணக்கில் காணப்படும் மீதியை குறித்த வழங்கல் நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் பேரில் நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில், நிறுவகத்தின ஆராய்ச்சி பொது நிதிக்கு மாற்றுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 6282 - Research grant on safe use of Chrysotile Asbestos in Sri Lanka தற்போதைய கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் ஆராய்ச்சியில் பணியாற்றிய ஆராய்ச்சி உதவியாளர் வெளியேறியதைக் கருத்தில் கொண்டு ஆராய்ச்சி காலத்தை நீடிப்பதற்கான கோரிக்கையை ஏற்கனவே தொடர்புடைய ஆராய்ச்சி நிதியளிக்கும் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது, மேலும் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிதியளிப்பவரின் பொறுப்பேற்றலின் அடிப்படையில் அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 6286 - Conserving Kurunegala Lake for Sustainable Water Supply இந்த ஆராய்ச்சி தொடர்பான கால அவகாசம் 31.12.2022 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான ஆய்வுகள் முடிக்கப்பட்டு, இறுதி அறிக்கையும் சம்பந்தப்பட்ட நிதியளிப்பு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 31.12.2022 இல் உள்ளவாறுஇந்த ஆராய்ச்சி மானியக் கணக்கில் இருப்பொன்று

	இல்லை என்றும் அறிய தருகின்றேன்.
(இ)	ஆராய்ச்சி மானியங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட இந்த நிலையான சொத்துக்கள், விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி மானியங்கள் மூலம் வாங்கப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக பராமரிக்கப்படும் பொருட்பதிவேட்டில் ஏற்கனவே உள்ளிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த ஆராய்ச்சி மானியங்களிலிருந்து வாங்கப்பட்ட நிலையான சொத்துக்களை விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்திற்கு நிரந்தரமாக மாற்றுவதற்கு தொடர்புடைய ஆராய்ச்சி நிதி நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி பயனாளிகளுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது மற்றும் அதற்கான கடிதத்தின் பிரதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
(ஈ)	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தால் செயற்படுத்தப்பட்ட 23 ஆராய்ச்சி மானியங்களில், தொடர்புடைய ஆராய்ச்சி பெறுநர்கள் 12 ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளனர். மேலும், ஏனைய ஆராய்ச்சி மானியங்கள் மூலம் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தல் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பதைத் தவிர, தத்துவம் மற்றும் முதுமானிப் பட்டங்களை வழங்குதல் மற்றும் பல நோக்கங்கள் இந்த ஆராய்ச்சி மானியங்கள் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
(உ)	கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்படுத்தப்படாமல் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ள 6 ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான காரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. <u>6225 - Collaborative Research Activities</u> ஆய்வுப் பணிகளை முடித்து, இறுதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராய்ச்சி மானியக் கணக்கில் எஞ்சியுள்ள தொகை, ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய நிதியில் ஆய்வு உபகரணங்களை வாங்குவதற்கு விலை விபரங்கள் கோரி செய்து பொருட்களை கட்டளை இட்ட போதிலும், அந்த விலையில் பொருட்களை வழங்க வழங்குனர்கள் முன்வராததால், மீண்டும் விலை விபரங்கள் கோரப்படுகிறது. அதன்படி, இந்த நிதி எதிர்காலத்தில் செயற்திறனாக பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆராய்ச்சி தொடர்பான கால எல்லை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மானிய நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் பேரில் 2023.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளது, அதன்படி, இந்த ஆராய்ச்சிப் பணிக்காக தொடர்புடைய நிதி செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. <u>6290 - Sea Turtle Egg Sales and Consumptive use in Sri Lanka</u>. <u>6279 - Study on floristic Diversity of Ambokka Mountain Range</u> மீளாய்வாண்டின் இறுதியில், இந்தக் கணக்கில் காணப்பட்ட மீதி மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி பிரதான கணக்கில் உள்ள மீதி ஆகியவை தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுவிட்டன, தற்போது தொடர்புடைய ஆராய்ச்சி முதன்மைக் கணக்கில் மீதியொன்று இல்லை. <u>6287 - Diversity of Freshwater Snails in the Central Province of Sri Lanka and their DNA Barcoding and Molecular Phylogenetic Analysis</u> மீளாய்வாண்டின் இறுதியில் இந்தக் கணக்கில் காணப்பட்ட மீதி தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு அல்லது நிதிக் குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில், உடன்படிக்கையின் அடிப்படையில் இந்தக் கணக்கில் உள்ள மீதியை நிறுவனத்தின் ஆராய்ச்சி பொது நிதிக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

	6242-Value Addition to Sri Lanka Laterites 6291 - Proposed Project on Synthesis of value added products from Sri Lanka Zircon Sand இந்த ஆராய்ச்சி நிதிக் கணக்குகளின் மீதியைத் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கு வழங்கிய நிறுவனத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அல்லது தொடர்புடைய ஆராய்ச்சி மானியதாரர்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.
	கணக்காய்வு அறிக்கையில் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு கடைப்பிடிக்கப்படாத 4 முக்கிய ஆய்வுப் புள்ளிகள் தொடர்பான காரணங்களின் விளக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. 6225 - Collaborative Research Activities இந்த ஆராய்ச்சி மானியம் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தால்மற்றும் விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஆகியவற்றால் நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட ஒரு கூட்டு ஆராய்ச்சி திட்டமாகும், மேலும் ஆராய்ச்சி பணிகள் முடிக்கப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி மானியக் கணக்கின் தற்போதைய மீதி ரூபா 215,755.35 ஆக இருந்ததுடன் ஆராய்ச்சி உபகரணங்களை வாங்குவதற்கு பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஒரு கூட்டு ஆராய்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது மற்றும் தனி ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. 6242 - Value Addition to Sri Lanka Laterites இந்த ஆய்வு தொடர்பான ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆராய்ச்சி மானியக் கணக்கில் இருப்பு என்பது, இந்த ஆராய்ச்சியில் மேலும் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட தொகையாகும், மேலும் தனியான ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை. 6291 - Proposed Project on Synthesis of Value Added Products from Sri Lanka Zircon sand இந்த ஆராய்ச்சி மானியம் தொடர்பாக ஒரு தனி ஒப்பந்தம் செய்யப்படவில்லை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிவு தொடர்பான நிதியளிப்பவர் வழங்கிய இணக்கப்பட்டின் அடிப்படையில் தொடர்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும். 6289 - Technology Grants Covid Cell 2020 இந்த ஆராய்ச்சி மானியம் தொடர்பாக ஆய்வு ஒப்பந்தம் செய்யப்படவில்லை மற்றும் ஆராய்ச்சி மானியக் கடிதத்தில் உள்ள ஏற்பாடுகளின்படி ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
(ஊ)	நிதிக்கூற்றுக்களில் செயலமர்வுகள் மற்றும் குறுகிய கால பாடநெறிகளின் கீழ் செலுத்த வேண்டிய செலவுகள் என குறிப்பிடப்பட்டுள்ள 02 குறுகிய கால படிப்புகள் தொடர்பான பெறுமதி குறித்து, நிதிக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றுக்கு அறிக்கையிட்டு அதன் மூலம் வழங்கப்படும் பரிந்துரைகள் முகாமைத்துவ சபைக்கு அனுப்பி அதன் பிரகாரம் பொருத்தமான உரிய எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எச்.எம்.ரீ.ஜே.ஏ.பிட்டவெல

பணிப்பாளர்
விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகம்

16. தணிக்கை மற்றும் நிர்வாகக் குழுவின் அறிக்கை

REPORT OF THE AUDIT & MANAGEMENT COMMITTEE, POSTGRADUATE INSTITUTE OF SCIENCE - 2022

Introduction

The Audit and Management Committee was appointed by the Postgraduate Institute of Science Board of Management at its141st Meeting held on 09.05.2018. The Committee comprises of two Non-Executive Governing Council Members of the University and a member representing the General Treasury under the provisions made on paragraph 7.4.1 of the Public Enterprises Guideline for Good Governance.

In the year2022, four (04) Audit & Management Committee meetings were held with the participation of the Director, Deputy Registrar, Senior Assistant Bursar, Assistant Registrar, and the Superintendent of Audit of the National Audit Office who is the representative of the Auditor General of Sri Lanka. The Audit & Management Committee performs its duties according to the scope specified in the Public Enterprises Guidelines for Good Governance, University Grants Commission Circulars, and Ministry of Higher Education Circulars and makes recommendations to strengthen the Internal Control Systems on the operations of Finance, Academic, Non-Academic, activities and improve the Administrative Procedures of the Postgraduate Institute of Science, University of Peradeniya.

Progress

During the year under review, the Audit and Management Committee has made several recommendations, directions and proposals which have paved the way toward the improvement of internal controls and auditing. The Postgraduate Institute of Science, University of Peradeniya was also able to obtain an Unqualified Audit Opinion (Clear Opinion) from the Auditor General on the Financial Statements for the financial year ended 31st December 2021.

Internal Audit Division

Important matters and work done by the Internal Audit Division under the guidance of the Audit & Management Committee can be summarized as follows.

- The Internal Audit Division has made 31 recommendations by issuing 03 Internal Audit Reports by upgrading the internal control systems of the University even under a roster basis of the staff attendance in compliance with the government instructions to address the fuel shortage and economic crisis.

- Liaised with the External Auditor and directed the officers employed by the Postgraduate Institute of Science, University of Peradeniya to take follow-up actions on highlighted flaws and lapses on audit queries and reports of the Auditor General.

- In addition, the Internal Audit Division has almost covered its Annual Internal Audit Plan by using Sample Audit techniques, Tests of controls, Substantive analytical procedures and detailed substantive procedures.

Accordingly, the important matters were discussed in the meetings of the Audit & Management Committee and the recommendations of the Committee can be summarized as follows.

- Reviewed, evaluated and made recommendations to develop the policy on revenue recognition of the Postgraduate Institute of Science.
- To prepare a comprehensive report on the outstanding the student course fee to the Institute and to analyze the dropout student of the institute.
- To follow the rules and regulations regarding contract administration, recruitment of the academic staff, documentation of the personal file and releasing the retirement benefits of the employees reported through the management letters placed before the Audit and Management Committee.
- To revalue the assets that are shown at zero value in the financial statement
- To follow the SOPs and guidelines for Consulting Services provided by the PGIS.
- Reviewed, evaluated and made recommendations on internal controls on the procurement process for purchasing equipment of the PGIS
- Reviewed, evaluated and made recommendations on the Internal Control Procedures regarding the motor vehicles of Postgraduate Institute of Science, UoP
- To submit a detailed report on all Research Grants to the Audit and Management Committee.
- Reviewed the financial fraud that occurred at the PGIS and made recommendations to be kept as a regular agenda item of the Board of Management and recommended to table the progress of the matter at the Audit and Management Committee.
- To take corrective action as per the directives of the COPE
- To implement the security deposit as per FR 880 to the officers who are handling the transactions of cash and cash equivalent
- To expedite the process of verification of the assets and stores and to submit the reports to the auditors on time.

The following are the comments made by the Chairman of the Audit and Management Committee.

- The present top management has taken positive steps to implement the recommendations of the Audit &Management Committee and Internal Audit Division.

- The necessary steps are being taken to rectify the weaknesses in the Internal Control Systems in the Institute and the accounting and internal control systems have to be further reviewed, upgraded and enforced.

- The Institute has to be reorganized to identify weaknesses in the staff, design and conduct training programs to improve the performance of staff in each category. The staff of the Administration/ Finance Divisions have to be fully aware of the rules and regulatory framework of the Institute. The staff awareness programs need to be improved E.g. an awareness program on the vehicle management.

- The cooperation of staff is required for the implementation of internal controls recommended by Internal Audit Division, Audit & Management Committee and Auditor General's Department.

Failures and Justifications

The Internal Audit Division has made their Internal Audit Activities on the approved Internal Audit Plan under insufficient human resource allocation. Presently, Internal Audit Division has expanded its duties of internal audit not only to the University of Peradeniya but also to the Postgraduate Institute of Agriculture, Postgraduate Institute of Science, Postgraduate Institute of Humanities & Social Sciences, and Postgraduate Institute of Medical Sciences since 2019.

These Institutes function as separate entities funded by National Budget without allocating any staff for Internal Auditing. The internal Audit Division of the University should carry out more than 20 Audit & Management Committee meetings annually. Out of which, a minimum of 04 meetings for University and 04 meetings for each Postgraduate institute should be held. As the Internal Auditor has to participate in so many meetings and take up minutes of said meetings and more time and staff have to be allocated for pre-audit activities.

When considering the above huge volume of activities of the University of Peradeniya and its Postgraduate Institutes, it is justifiable to provide additional cadres to fully implement the Annual Audit Plan of the University. Also, separate cadres are required to be allocated for each Postgraduate Institute to function their audit activities smoothly.

Future Plans

The Audit & Management Committee of the Postgraduate Institute of Science is planning to further extend its objectives to review the systems and controls and make its recommendations to strengthen the internal control systems for upgrading the financial and administrative procedures of the Postgraduate Institute of Science, University of Peradeniya. Further, it is requested to increase human resource allocation for the Internal Audit Division to effectively perform its duties and functions.

DEPUTY INTERNAL AUDITOR
University of Peradeniya
Peradeniya

Mr. D.M.B.G. Diyagama
Chairman, Audit & Management Committee
Postgraduate Institute of Sciences

Mr. Sugath Kodithuwakku
Deputy Internal Auditor

அறிமுகம்

விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ சபையால் 2018.05.19 ஆந் திகதி நடைபெற்ற 141 ஆவது கூட்டத்தின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமனம் செய்யப்பட்டது. இக்குழு பொது முயற்சிகள் நல்லாளுகைக்காக வழிகாட்டியின் 7.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையின் நிறைவேற்றுனர் அல்லாத மூன்று உறுப்பினர்கள் மற்றும் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரும் கணக்காய்வுக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதியை பிரதிநிதிப்படுத்தக் கூடியவாறு தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகரின் பங்குபற்றலுடன் பணிப்பாளர், பிரதி பதிவாளர், சிரேஷ்ட நிதியாளர், உதவிப் பதிவாளர் ஆகியோருடன் 2022 ஆம் நான்கு (04) கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நல்லாளுகைக்காக பொது முயற்சிகள் வழிகாட்டி, பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள், உயர் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தனது கடமைகளை மேற்கொள்வதுடன் நிதி, கல்வி, கல்விசாரா செயற்பாட்டு நடவடிக்கைகளில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்காக நிர்வாகச் செயன்முறையை மேம்படுத்துவதற்கும் பரிந்துரைகளை சமர்ப்பித்தல் இடம்பெறும்.

முன்னேற்றங்கள்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வினை மேம்படுத்துவதற்கு வழிகாட்டும் சில பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகம் 2021 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் இருந்து முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு முடியுமாக இருந்தது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டலின் கீழ் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான செயற்பாடுகளை பின்வருமாறு பொழிப்பாக்கி குறிப்பிடலாம்.

- எரிபொருள் பற்றாக்குறை மற்றம் பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வினை வழங்குவதற்காக அரசின் அறிவுறுத்தரல்களுக்கு இணங்க பதவியணியனிரின் வருகை தொட்ர்பாக சுழற்சி முறைமையில் செயற்பட்டு பல்கலைக்கழகத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை

மேம்படுத்துவதன் மூலம் 03 உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளை வழங்கி உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 31 இற்கு மேற்பட்ட பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

- வெளிவாரி கணக்காய்வாளருடன் தொடர்புகொண்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை, கணக்காய்வு விசாரணைகள் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஆலோசணை வழங்கப்பட்டது.

- இதற்கு மேலதிகமாக உள்ளக கணக்காய்வு பிரிவினால் மாதிரி கணக்காய்வு நுட்ப முறைமை, கட்டுப்பாட்டு பரிசோதனைகள், குறைக்கும் பகுப்பாய்வு நடைமுறை மற்றும் விரிவான நிதிப் பகுப்பாய்வு நடைமுறைகளைப் பின்பற்றி அதன் வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை மேவுகை செய்கின்றது.

அதன் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் குழுவின் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் இவ்வாறு பொழிப்பாக குறிப்பிடலாம்.

- விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் வருமானத்தை இனங்காணுதல் கொள்கையை தயாரிப்பதற்காக மீளாய்வு மதிப்பீடு மற்றும் பரிந்துரைகளை முன்வைத்தல்.
- நிறுவனத்திற்கு பெற வேண்டி உள்ள நிலுவை மாணவர் பாடநெறிக் கட்டணங்கள் தொடர்பாக விரிவான அறிக்க ஒன்றை தயாரிப்பதற்கும் நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்ற மாணவர்கள் தொடர்பாக பகுப்பாய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.
- ஒப்பந்த நிர்வாகம் கல்விசார் பதவியணியினர் ஆட்சேர்ப்பு தனிப்பட்ட கோவைகள் முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பப்படும் கடிதங்கள் மூலம் அறிக்கை இடப்பட்ட ஊழியர்களின் ஓய்வூதிய நலன்களை வழங்குதல் தொடர்பான சட்ட விதிகளை பின்பற்றுதல்.
- பூச்சியமான பெறுமதியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்தல்.
- விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் (PGIS) மூலம் வழங்கப்படுகின்ற மதியுரை சேவைகளுக்காக மற்றும் SOP வழிகாட்டுதலை பின்பற்றுதல்.
- பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIS) உபகரணங்கள் கொள்வனவுக்காக பெறுகை செயற்பாடு தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல் மதிப்பிடல் பரிந்துரை சமர்ப்பித்தல்.
- அனைத்து ஆராய்ச்சி மானியங்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பித்தல்.
- விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PGIS) இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக மீளாய்வொன்றை செய்து முகாமைத்துவ சபையின் நிரந்தர நிகழ்ச்சி நிழல் ஒன்றாக பேணி செல்லப்பட வேண்டியதாக பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டதுடன் அக்காரணத்தின் செயற்முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் சபைக்கு முன் வைக்கக்கூடிய பரிந்துரைகள் பரிந்துரைக்கப்பட்டன.
- பொது முயற்சிகளுக்கான செயற்குழுவின் கட்டளைகளின் பிரகாரம் திருத்தங்களை செயல்படுத்துதல்.
- நிதி மற்றும் நிதி கருவிகளில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு நி.பி 880 இன் பிரகாரம் பிணைவைப்பு செயல்படுத்துதல்இ
- சொத்துக்கள் மற்றும் களஞ்சிய மெய்மையாய்வு செயற்பாடு துரிதப்படுத்துதல் மற்றும் உரிய நேரத்தில் கணக்காய்வாளர்களுக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்

கணக்காய்வு மற்றும் கணக்காய்வு மற்றும் முகமைத்குவ குழுவின் தலைவரால் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள கீழே காட்டப்பட்டுள்ளன.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவுகளில் பரிந்துரைச் ஏற்படுத்துவதற்காக தற்போது உயர் முகாமைத்துவத்தினால் நேரியசிந்தனை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறையில் காணப்படும் பலவீனங்களை சரி செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கணக்கீடு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்ந்து மீளாய்வு செய்து மேம்படுத்தி அமுலாக்கப்பட வேண்டும்.
- பதவியணயின் பலவீனங்களை இனங்காணுதல் ஒவ்வொரு தொகுதி பதவியின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிறுத்தி திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் நடத்துவதற்காக நிறுவகத்தை மீளமைப்பு செய்யப்பட வேண்டும்.
- நிர்வாக மற்றும் நிதி பிரிவின் பதவியணி நிறுவனத்தின் சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பாக முழுமையாக அறிந்திருக்க வேண்டும்இ பதவியணியினர் அறிவூட்டும் நிகழ்ச்சிகளை மேம்படுத்த வேண்டும்
  உதாரணமாக வாகன முகாமைத்துவம் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சி திட்டங்களை நடத்துதல்.
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்படுகின்ற உள்ளக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக பதவியிணர் ஒத்துழைப்பு தேவையாகும்

தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்கள்

உள்ளக கணக்காய்வுப் பிரிவு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின்படி போதியவில் காணப்படாத மனித வள ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தற்போதைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது 2019 ஆம் ஆண்டு முதல் தனது உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மட்டுமன்றி விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம், விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் மற்றும் மருத்துவ விஞ்ஙானப் பட்டப்பின் படிப்பு நிறுவகங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.

உள்ளக கணக்காய்விற்காக எந்தவொரு பதவியணினரையும் ஒதுக்காமல் தங்கள் சொந்த நிதியில் இருந்து நிதியளிக்கப்பட்ட ஒரு தனி நிறுவனமாக செயல்படுகிறது. பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு ஆண்டுதோறும் 20 இற்கும் மேற்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துகின்றது. அதில், பல்கலைக்கழகத்திற்கு குறைந்தது 04 கூட்டங்களும் ஒவ்வொரு பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கும் 04 கூட்டங்கள் வீதம் நடத்தப்பட வேண்டும். உள்ளக கணக்காய்வாளர் பல கூட்டங்களில் கலந்து கொண்டு, அந்தக் கூட்டங்களைப் பற்றிய குறிப்புகளை வைத்துக் கொள்ள வேண்டியிருப்பதால், கணக்காய்விற்கு முன்னைய நடவடிக்கைகளுக்கு அதிக நேரமும் பணியாளர்களும் ஒதுக்கப்பட வேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினதும் அதன் பட்டப்பின் படிப்பு நிறுவகங்களின் மேற்கூறிய விரிவான செயற்பாடுகளைக் கருத்தில் கொள்ளும் போது, பல்கலைக்கழகத்தின் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மேலதிக பணியாளர்களை வழங்குவது நியாயமானது. மேலும், ஒவ்வொரு பட்டப்பின் படிப்பு நிறுவங்களின் கணக்காய்வுப் பணிகளைச் சரியாகச் செய்வதற்கு அந்த நிறவனங்களுக்காக புறம்பான ஊழியர்களின் எண்ணிக்கையை ஒதுக்குதல் அவசியமாகும்.

எதிர்காலத் திட்டங்கள்

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு நிறுவனங்களின் நிதி மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் முறைமை மற்றம் நிர்வாக மீளாய்விற்கும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும் அதன் நோக்கங்களை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. மேலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளுக்கு தங்கள் பொறுப்புகளையும் செயற்பாடுகளையும் திறம்படச் செய்வதற்குத் தேவையான மனித வள ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திரு டி.எம்.பி.ஜி தியகம

தலைவர், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு,
விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம்

திரு. சுகத் கொடிதுவக்கு

பிரதி உள்ளகக் கணக்காய்வாளர்

அசல் ஆவணத்தில் கையொப்பமிடப்பட்டது